


# மாணவர் துணைஎடு


# புவியியல்

## க.பொ.த சா/த

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்


The National e-learning Portal for The General Education

Evergreen Printers 693,K.K.S.Road, Jaffna. Tel:021 2219893


Rain Clouds
Cloud Formation
PRECIPITATION
EVAPORATION
Surface Runoff
Infiltration
Soil
Percolation
Rock
Deep Percolation
Ground water
Ocean

# தரம் – 10

# புவியியல்



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 01 | புவியின் சேர்க்கை | 1 |
| அலகு 02 | புவியின் பிரதான பௌதிக பண்புகள் | 4 |
| அலகு 03 | உலகின் விவசாய நிலப் பயன்பாட்டின் பிரதான வகைகள் | 9 |
| அலகு 04 | இலங்கையின் விவசாயம் | 12 |
| அலகு 05 | தயாரிப்புக் கைத்தொழில் | 16 |
| அலகு 06 | இலங்கையின் கைத்தொழில்கள் சிலவற்றின் பரம்பல் பிரச்சினைகளும் போக்குகளும் | 19 |
| அலகு 07 | படங்களுக்கு ஓர் அறிமுகம் | 25 |


The National e-Learning Portal for The General Education

## அலகு - 01
## புவியின் சேர்க்கை

### பகுதி *I*

✻ சுருக்கமான விடை தருக.

01) ஞாயிற்றுத் தொகுதியில் உயிரினங்கள் வாழக்கூடிய கோள் எது?

02) உயிரின வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விடயங்கள் இரண்டு தருக?

03) புவிமேற்பரப்பின் மொத்தப் பரப்பளவு யாது?

04) கற்கோளம் என்றால் என்ன?

05) கற்கோளத்தின் பௌதிக அம்சங்கள் இரண்டு தருக.

06) கற்கோளத்தில் உள்ளடங்கும் இரு பகுதிகளும் எவை?

07) புவியோட்டின் இரு பகுதிகளும் எவை?

08) உயிரினங்களினதும், மனிதனதும் செயற்பாடுகள் இடம்பெறும் கோளம் எது?

09) காடுகளை அழிப்பதனால் ஏற்படும் விளைவு ஒன்று தருக?

10) கற்கோளத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவு ஒன்று தருக?

11) வளிமண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுவதற்கான காரணம் யாது?

12) வளிமண்டலத்திலுள்ள 50 சதவீதமான வளி உள்ளடக்கம் புவிமேற்பரப்பிலிருந்து பரந்துள்ள தூரம் யாது?

13) தாவரங்களினதும், உயிரினங்களினதும் நிலைத்திருப்பிற்கு வளிமண்டலம் இன்றியமையாமல் இருப்பதற்கான காரணம் யாது?

14) வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்கள் மூன்று தருக.

15) மனித நடவடிக்கைகள் காரணமாக வளிமண்டலம் மாசடைவதற்கு ஏதுவான வாயுக்கள் மூன்று தருக.

16) புவிமேற்பரப்பிலிருந்து 8 - 12 km வரை பரந்து காணப்படும் மண்டலம் எது?

17) சூழல் நழுவு வீதம் அல்லது வெப்ப நழுவு வீதம் என்றால் என்ன?

18) வளிமண்டலத்தின் தோற்றப்பாடுகளான படிவு வீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம் போன்றன உருவாகும் மண்டலம் எது?

19) உயிர்க்கோளம் நிலைத்திருப்பதற்கு அவசியமான மண்டலம் எது?

20) மாறன் மண்டலத்தின் மேல் எல்லைக்கு வழங்கப்படும் பெயர் என்ன?

21) வளிமண்டலத்தில் 48 - 50 km வரை பரந்துள்ள படை அமைப்பின் பெயர் என்ன?

22) உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பிற்கு அவசியமானதும், படை மண்டலத்தில் 20 - 30 km வரை பரந்துள்ளதுமான படையின் பெயரைத் தருக?

23) புவிக்கு வருகின்ற புற ஊதாக் கதிர்களைத் தடை செய்கின்ற படையின் பெயரைத் தருக.

24) புவியை நோக்கி வருகின்ற விண்கற்கள் எரிந்து அழிவடையும் படை எது?

25) சாதாரண விமானங்கள், அதிவேக ஜெட் விமானங்கள் பயணம் செய்யும் படையமைப்புக்களை முறையே தருக?

26) படை மண்டலத்தின் மேல் எல்லையின் பெயரைத் தருக.

27) கடல் மட்டத்திலிருந்து 80 km உயரம் வரை பரந்து காணப்படும் மண்டலத்தின் பெயரைத் தருக.

28) வளிமண்டலத்தில் மிகவும் தாழ்ந்த வெப்பநிலை நிலவும் மண்டலம் எது?

29) வளிமண்டலத்தில் நீராவி, தூசு துணிக்கைகள், முகில் என்பன இல்லாத மண்டலம் எது?

30) மின்னியக்க செயற்பாடு அதிகளவு இடம்பெறும் படை எது?

31) இடை மண்டலத்தின் மேல் எல்லைக்கு வழங்கப்படும் பெயர் என்ன?

32) வளிமண்டலத்தில் மிகவும் வெப்பமான படையின் பெயரைத் தருக?

33) உயரத்திற்கேற்ப வெப்பநிலை அதிகரித்துச் செல்லும் படை எது?

34) நீர்க்கோளம் என்றால் என்ன?

35) நீர்க்கோளத்தில் 20 சதவீதம் பரம்பியுள்ள நீருக்கு வழங்கப்படும் பெயர் என்ன?

36) தாவரங்களிலிருந்து ஆவியாகும் நீரிற்கு வழங்கப்படும் பெயர் என்ன?

37) புவியோட்டிலிருந்து மூடியைப் பிரிக்கும் எல்லை யாது?

38) மையத்திலிருந்து மூடியைப் பிரிக்கும் எல்லை யாது?

39) புவியிலுள்ள பிரதான தகடுகளின் எண்ணிக்கை யாது?

40) புவித்தகடுகள் நகர்வதற்கான காரணம் என்ன?

The National e-learning Portal for The General Education

## பகுதி *II*

01) i) புவித் தொகுதியின் நான்கு உப தொகுதிகளையும் பெயரிடுக. (2 புள்ளி)

ii) மேலே உம்மால் பெயரிடப்பட்ட உப தொகுதிகளுக்கிடையிலான இடைத் தொடர்புகள் மூன்றினைத் தருக. (3 புள்ளி)

iii) கற்கோளத்திலுள்ள வளங்கள் பயன்படுத்தப்படுவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் ஐந்தினைக் குறிப்பிடுக. (5 புள்ளி)

02) i) வளிமண்டலம் என்றால் என்ன என்பதனை வரையறை செய்க. (2 புள்ளி)

ii) வளிமண்டலத்தில் உள்ள பிரதான வாயுக்கள் மூன்றினை அவற்றின் விகித ஒழுங்கில் தருக. (3 புள்ளி)

iii) வளிமண்டலப் படையமைப்பினை வரைந்து பெயரிடுக. (5 புள்ளி)

03) i) வளிமண்டலத்தினை மாசடையச் செய்யும் முக்கிய வாயுக்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) வளிமண்டலப் படையமைப்புக்களில் ஏதாவது ஒன்றின் சிறப்பியல்புகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) வளிமண்டலத்தினால் மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக. (5 புள்ளி)

04) i) நீர்க்கோளம் என்பதனை வரையறை செய்க. (2 புள்ளி)

ii) மனித நடவடிக்கையின் தாக்கங்களினால் நீரின் தரம் குறைவடைந்து செல்வதற்கான காரணங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) நீரியல் வட்டச் செய்முறையினை வரைபடம் மூலம் விளக்குக. (5 புள்ளி)


05) i) உயிர்க்கோளம் என்றால் என்ன? (2 புள்ளி)

ii) உயிர்க்கோளத்தின் செய்முறைகளைப் பாதிக்கும் பிரதான இரண்டு காரணிகளும் எவை? (3 புள்ளி)

iii) உயிர்க் கோளத்தின் எல்லைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

06 ) i) புவி அமைப்பின் பிரதானமான மூன்று படைகளையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) படத்தில் A, B, C எனக் குறிக்கப்பட்ட பகுதிகளைப் பெயரிடுக. (3 புள்ளி)




iii) புவி அமைப்பிலுள்ள படைகளில் ஏதாவது ஒரு படையின் சிறப்பம்சங்கள் ஐந்தினைத் தருக. (5 புள்ளி)


07) i) புவியின் சிறிய தகடுகள் ஆறினைப் பெயரிடுக. (2 புள்ளி)

ii) தரப்பட்ட உலகப்படத்தில் பின்வரும் தகடுகளைக் குறித்துப் பெயரிடுக.

அ) யுரேசியத் தகடு

ஆ) இந்து - அவுஸ்திரேலியத் தகடு

இ) பசுபிக் தகடு (3 புள்ளி)



iii) பின்வரும் நாடுகள் அமைந்துள்ள புவித்தகடுகளைக் குறிப்பிடுக.

இலங்கை -

யப்பான் தீவு -

பிரித்தானியத் தீவு -

பிரேசில் -

சவுதி அரேபியா - (5 புள்ளி)

## அலகு - 02
## புவியின் பிரதான பௌதிகப் பண்புகள்

**✻ சுருக்கமான விடை தருக.**

01) சமுத்திர நீர்ப்பரப்பில் இருந்து உயர்ச்சி அடைந்துள்ள பாரிய நிலத்திணிவுக்கு வழங்கப்படும் பெயர் என்ன?

02) புவியின் மொத்தப் பரப்பளவில் நிலப்பகுதியின் சதவீதம் யாது?

03) உலகில் உள்ள கண்டங்களின் எண்ணிக்கை யாது?

04) கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரத்தை நோக்கிப் பரந்துள்ள ஆழங்குறைந்த கடற்பரப்பிற்கு வழங்கப்படும் பெயர் என்ன?

05) கண்டச் சாய்வு என்றால் என்ன?

06) தீவு என்றால் என்ன?

07) ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள தீவுகள் இரண்டு தருக.

08) உலகின் மிகப் பெரிய, சிறிய கண்டங்களைத் தருக.

09) அவுஸ்திரேலிய கண்ட மேடையில் அமைந்துள்ள தீவுகள் இரண்டு தருக.

10) ஆபிரிக்க கண்ட மேடையில் அமைந்துள்ள தீவு ஒன்று தருக.

11) எரிமலைச் செயற்பாடுகளின் காரணமாக உருவாகிய இரு தீவுகளின் பெயர்களைத் தருக.

12) சமுத்திரம் என்றால் என்ன?

13) உலகில் உள்ள சமுத்திரங்களின் எண்ணிக்கை யாது?

14) அகழிகள் அதிகம் காணப்படும் சமுத்திரம் எது?

15) புவியின் மொத்தப் பரப்பளவில் நீர்ப்பரப்பின் சதவீதம் யாது?

16) முற்று முழுதாக நிலப்பரப்பினால் சூழப்பட்ட கடல்கள் இரண்டு தருக.

17) சமுத்திரத்துடன் தொடர்புடைய கடல்கள் இரண்டு தருக.

18) ஆசியாவில் உள்ள மிகப் பெரிய மலைத்தொடரின் பெயர் என்ன?

19) மேட்டு நிலம் என்றால் என்ன?

20) கடல் மட்டத்திலிருந்து மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டு நிலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

21) இலங்கையில் உள்ள மேட்டு நிலங்கள் மூன்று தருக.

22) சமவெளி என்றால் என்ன?

23) அவுஸ்திரேலியாவில் உள்ள பிரதான சமவெளியின் பெயரைத் தருக?

24) உலகின் மிக நீளமான நதியின் பெயர் என்ன?

25) உலகில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள ஏரி எது?

26) உலகின் மிகப் பெரிய ஏரி எது?

27) காலநிலை என்றால் என்ன?

28) உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன் முதல் வெளியிட்ட கிரேக்க தத்துவவியலாளரின் பெயரைத் தருக?

29) காலநிலைப் பாகுபாடு தொடர்பான கருத்துக்களை முன்வைத்த அறிஞர்களின் பெயர்கள் மூன்று தருக.

30) உலகில் உள்ள மூன்று காலநிலை வலயங்களைத் தருக.

31) அயன வலயத்தின் எல்லைகளைத் தருக.

32) அயன வலயத்தின் பண்புகள் இரண்டு தருக.

33) அயனக் காலநிலை வலயத்தின் விசேடமான பண்பினைத் தருக?

34) அயனப் பிரதேசத்தில் உள்ளடங்குகின்ற உயர் மழைவீழ்ச்சியைப் பெறுகின்ற பிரதானமான பிரதேசங்கள் இரண்டு தருக?

35) உலகின் மிகப் பெரிய பாலைவனம் எது? அது அமைந்துள்ள கண்டம் எது?

36) இடைவெப்ப வலயத்தின் எல்லைகளைத் தருக.

37) மத்தியதரைக் காலநிலை உள்ளடங்குகின்ற காலநிலை வலயம் எது?

38) முனைவுக் காலநிலை வலயத்தின் பிரதான பண்புகள் இரண்டு தருக.

39) முனைவுக் காலநிலை வலயத்தில் உள்ள விசேட காலநிலையின் பெயர் யாது?

40) $23\frac{1}{2}^0$ வட அகலக் கோட்டின் பெயர் என்ன?

## பகுதி *II*

01) i) புவியின் பிரதான பௌதிகப் பண்புகள் இரண்டும் எவை? (2 புள்ளி)

ii) புவிமேற்பரப்பில் காணப்படும் தரைத்தோற்ற அம்சங்கள் நான்கு தருக. (3 புள்ளி)

iii) தீவாக அமைந்துள்ள ஒரு நாட்டின் அமைவிடத்தினால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தீமைகள் இரண்டு தருக. (5 புள்ளி)

02) i) உலகிலுள்ள பாரிய மலைத் தொடர்கள் இரண்டு தருக? (2 புள்ளி)

ii) இலங்கையிலுள்ள மேட்டு நிலங்கள் நான்கு தருக? (3 புள்ளி)


iii) சமவெளிகள் மனித நடவடிக்கைக்குச் சாதகமாக அமையும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

03) i) காலநிலை மூலகங்கள் நான்கு தருக. (2 புள்ளி)

ii) காலநிலை, வானிலை என்பவற்றை வேறுபடுத்துக. (3 புள்ளி)

iii) மாதிரிப் பூகோளமொன்றில் உலகின் பிரதான காலநிலை வலயங்களை வரைந்து பெயரிட்டு, அவற்றில் ஒன்றினை விளக்குக? (5 புள்ளி)

01) கண்டங்களையும், சமுத்திரங்களையும் உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.




02) பின்வரும் தீவுகளை உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

- ※ கிறீன்லாந்து
- ※ ஐஸ்லாந்து
- ※ பிரித்தானியா
- ※ கனேரிஸ்தீவுகள்
- ※ போக்லண்ட் தீவுகள்
- ※ கியூபா
- ※ ஜமெக்கா
- ※ யப்பான்
- ※ சுமாத்திரா
- ※ நியூசிலாந்து
- ※ கிஸ்பானியோலா
- ※ இலங்கை
- ※ மாலைதீவு
- ※ சீசெல்ஸ்தீவு
- ※ மடகாஸ்கார்
- ※ சுமாத்திரா
- ※ தஸ்மேனியா
- ※ தாய்வான்
- ※ பப்புவா நியூகினி
- ※ பபின் தீவு




03) பின்வரும் கடல்களை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

- ※ கஸ்பியன் கடல்
- ※ வட கடல்
- ※ செங்கடல்
- ※ கருங்கடல்
- ※ கரீபியன் கடல்
- ※ ஒக்கொட் கடல்
- ※ மஞ்சள் கடல்
- ※ கிழக்கு சீனக்கடல்
- ※ தைமூர் கடல்
- ※ பியூபோட் கடல்
- ※ மத்தியதரைக் கடல்
- ※ அரபிக் கடல்
- ※ பால்டிக் கடல்
- ※ ஏரல் கடல்
- ※ யப்பான் கடல்
- ※ தென் சீனக்கடல்
- ※ அரபுராக் கடல்
- ※ வெண்கடல்




04) பின்வரும் மலைகளை உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

றொக்கிமலை, அந்தீஸ்மலை, அப்பலாச்சியன் மலை, அற்லஸ் மலை, டிறக்கன்ஸ்பேர்க் மலை, அல்ப்ஸ் மலை, அபினைன் மலை, யூரல் மலை, இமயமலை, அல்டாய்மலை, பெரியபிரிப்பு மலை




05) பின்வரும் மேட்டுநிலங்களை உலகப்புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

மெக்சிக்கோ, பிறேசிலியன், ஈரான் மேட்டுநிலம், பி (Pie) மேட்டுநிலம், அரேபிய மேட்டுநிலம், தக்கண மேட்டுநிலம், திபெத் மேட்டுநிலம், பமீர் மேட்டுநிலம், மொங்கோலியன் மேட்டுநிலம்.




06) பின்வரும் சமவெளிகளை உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

வட அமெரிக்கப் பெரிய சமவெளி, வட ஐரோப்பியச் சமவெளி, சைபீரியன் சமவெளி, இந்து கங்கைச் சமவெளி, மஞ்சூரியன் சமவெளி, வட சீனச் சமவெளி, நுல்லபார்ச் சமவெளி



07) பின்வரும் நதிகளை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

மக்கன்சி நதி, மிசூரிமிசிசிப்பி நதி, அமேசன் நதி, பரானா நதி, நைல் நதி, நைகர் நதி, கொங்கோ நதி, வொல்கா நதி, ஒப்நதி, ஜெனசி நதி, லீனா நதி, அமூர் நதி, குவாங்கோ நதி, இந்து நதி, கங்கை நதி, சிக்கியாங் நதி, மறேடாலிங் நதி, டான்யூப் நதி



08) பின்வரும் ஏரிகளை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

பெரிய சிலேவ் ஏரி, ஐம்பெரும் ஏரிகள், தித்திக்கா ஏரி, சாட் ஏரி, விக்டோரியா ஏரி, தங்கனிக்கா ஏரி, நயாசா ஏரி, பைக்கால் ஏரி, பால்காஸ் ஏரி, அயர் ஏரி



09) மாதிரிப் பூகோளம் ஒன்றினை வரைந்து பின்வரும் விடயங்களைக் குறித்துப் பெயரிடுக.

1) மத்திய கோடு
2) கடகக் கோடு
3) மகரக் கோடு
4) ஆட்டிக் வட்டம்
5) அந்தாட்டிக் வட்டம்
6) $90^0$ வட முனைவு
7) $90^0$ தென் முனைவு
8) அயன வலயம்
9) இடைவெப்ப வலயம்
10) முனைவு வலயம்

## அலகு - 03
## உலகின் விவசாய நிலப்பயன்பாட்டின் பிரதான வகைகள்

### பகுதி *I*

✻ சுருக்கமான விடை தருக.

*01)* நிலப்பயன்பாடு என்றால் என்ன?

*02)* உலக சனத்தொகையில் பெரும்பான்மையானோர் பங்குகொள்ளும் பொருளாதார நடவடிக்கை எது?

*03)* பெரும்பான்மையான ஆசிய மக்களின் பிரதான உணவு எது?

*04)* அவுஸ்திரேலியாவில் நெற்செய்கை செய்யப்படும் நதிக்கரையோரத்தின் பெயர் என்ன?

*05)* மலைச் சாய்வான பிரதேசங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் முறை யாது?

*06)* வர்த்தக நோக்கில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நாடுகள் மூன்று தருக.

*07)* நெற்பயிர்ச் செய்கைக்குச் சேதன உரங்களை அதிகம் பயன்படுத்தும் ஆசிய நாடுகளுள் ஒன்றினைத் தருக?

*08)* நெல் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நவீன நெல்லினம் ஒன்றின் பெயரைத் தருக?

*09)* உலகில் அதிகளவு உற்பத்தி செய்யப்படுவதும், நுகரப்படுவதுமான தானியம் எது?

*10)* கோதுமைப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான மண் வகை யாது?

*11)* அதிக விளைச்சலைத் தரும் நவீன கோதுமை இனம் எது?

*12)* உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அதிகளவில் ஈடுபடும் பயிர்ச்செய்கை எது?

*13)* சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர் எது?

*14)* உலகில் தேயிலைப் பயிர்ச்செய்கை முக்கியத்துவம் பெறும் பிரதேசம் எது?

*15)* தேயிலைச் செய்கைக்கு உகந்த மண் எது?

*16)* இன்று பிரபல்யம் பெற்றுவரும் தேயிலை பயிரிடப்படும் முறை எது?

*17)* இன்று உலகின் இயற்கை இறப்பர் உற்பத்தியில் 95 சதவீதமான பங்களிப்பினை வழங்கும் வலயங்கள் எவை?

*18)* இறப்பர் பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமான மண் எது?

*19)* இயற்கை இறப்பருக்கான பிரதியீட்டுப் பொருள் எது?

*20)* உலக மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்யும் பிரதான உணவு யாது?

*21)* உலகில் வர்த்தக ரீதியாக பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபடும் நாடுகள், சந்தைக்கு வழங்கும் பொருட்கள் நான்கு தருக?

*22)* உலகில் பாற்பண்ணைக் கைத்தொழிலில் ஈடுபடும் நாடுகள் பரம்பியுள்ள காலநிலை வலயம் எது?

*23)* கைத்தொழில் உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் பிரதான பெருந்தோட்டப்பயிர் எது?

*24)* ஐரோப்பாக் கண்டத்தில் பாற்பண்ணைக் கைத்தொழிலில் முன்னணி வகிக்கும் நாடு எது?

*25)* குளிர்ச்சியான காலநிலை நிலவுகின்ற, வேறு பயிர்கள் பயிரிட முடியாத பிரதேசங்களில் நடைபெறும் பொருளாதார நடவடிக்கையைத் தருக?

## பகுதி *II*

01) அ) விவசாய நிலப்பயன்பாட்டில் காணப்படும் பிரதான அம்சங்கள் இரண்டு தருக? (2 புள்ளி)

ஆ) நீண்ட காலமாக விவசாய நிலப்பயன்பாட்டின் பெறுமானம் குறைவடையாமைக்கான மூன்று காரணங்களைத் தருக? (3 புள்ளி)

இ) விவசாயப் பயிர்களுடன் தொடர்பான மூன்று உற்பத்திகளைக் குறிப்பிட்டு, ஒன்றினை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)


02) அ) நெற்செய்கைக்குச் சாதகமான பௌதிகக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) வழங்கப்பட்ட உலகப் புறவுருவப்படத்தில் ஆசியாவில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் இரண்டு நாடுகளையும் ஆசியாவுக்கு வெளியில் ஒரு நாட்டினையும் குறித்துப் பெயரிடுக. (3 புள்ளி)



இ) நெற்செய்கையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

03) அ) உலகப் புறவுருவப்படத்தில் உலகில் கோதுமைப் பயிர்ச்செய்கை இடம்பெறும் நான்கு நாடுகளைக் குறித்துப் பெயரிடுக. (2 புள்ளி)



ஆ) கோதுமைச் செய்கைக்குச் சாதகமான மானிடக் காரணிகள் மூன்று தருக. (3 புள்ளி)

இ) கோதுமைச் செய்கையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (5 புள்ளி)


04) அ) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ) உலகில் பயிரிடப்படும் பெருந்தோட்டப் பயிர்கள் மூன்று தருக. (3 புள்ளி)

இ) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு, ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. ( 5 புள்ளி)

05) அ) உலகப் புறவுருவப்படத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பின்வரும் நாடுகளைக் குறித்துப் பெயரிடுக.

1) சீனா
2) இந்தியா
3) கென்யா
4) இலங்கை (2 புள்ளி)



ஆ) தேயிலைச் செய்கைக்குச் சாதகமான பௌதிகக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) தேயிலைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு, ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

06) அ) உலகின் இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் நான்கு நாடுகளைத் தருக. (2 புள்ளி)

ஆ) இறப்பர் பயிர்ச்செய்கைக்குச் சாதகமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) இறப்பர் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு, ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

07) அ) வர்த்தக ரீதியான பாற்பண்ணைக் கைத்தொழிலில் ஈடுபடும் நான்கு நாடுகளைத் தருக. (2 புள்ளி)

ஆ) பாற்பண்ணைக் கைத்தொழிலுக்குச் சாதகமான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) பாற்பண்ணைக் கைத்தொழிலின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு, ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

## அலகு - 04
## இலங்கையின் விவசாயம்
### பகுதி *I*

01) இலங்கை மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கை எது?

02) இலங்கையின் ஆரம்ப காலக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்ட பிரதேசங்கள் எவை?

03) புராதன காலம் தொடக்கம் இலங்கையில் பயிரிடப்பட்டு வருகின்ற தானியம் எது?

04) வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு முதன்முதல் வருகை தந்த குழுவினர் யார்?

05) இலங்கையில் நெற்பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்த காலகட்டம் எது?

06) சுதந்திரத்தின் பின் நெற்பயிர்ச்செய்கையின் விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டு தருக.

07) 1960 களின் இறுதியில் இலங்கையின் நெற்பயிர்ச்செய்கை விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி எது?

08) இலங்கை மக்களின் பிரதான உணவு யாது?

09) இலங்கையில் நெற்பயிர்ச்செய்கை நடைபெறும் மூன்று போகங்களும் எவை?

10) இலங்கையில் மழை நீரை அடிப்படையாகக் கொண்டு நெற்பயிர்ச்செய்கை இடம்பெறும் வலயம் எது?

11) இலங்கையில் தேயிலைப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்திய ஆங்கிலேயரின் பெயரைத் தருக.

12) இலங்கையில் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?

13) சிங்க முத்திரையின் கீழ் Ceylon Tea யை அறிமுகப்படுத்தி உலகெங்கும் நுகர்வோரின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட நாடு எது?

14) தென்னை முக்கோண வலயத்தில் உள்ளடங்கும் பிரதேசங்கள் எவை?

15) சிறு தென்னை முக்கோண வலயத்தில் உள்ளடங்கும் பிரதேசங்கள் எவை?

16) இலங்கையில் லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?

17) இலங்கையில் 28 சதவீதமான நிலப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப் பயிர் எது?

18) இலங்கையில் முதலாவது இறப்பர் மரம் பயிரிடப்பட்ட பூங்கா எது?

19) இலங்கையில் அதிகளவு இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வலயம் எது?

20) இலங்கையில் அகலவத்தை இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?

21) சிறுஏற்றுமதிப்பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?

22) சிறுஏற்றுமதிப்பயிர் விருத்திக்காக 2010 இல் அமைக்கப்பட்ட சபையின் பெயரைத் தருக.

23) நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் செய்கை பண்ணப்படும் பழப் பயிர்கள் மூன்று தருக?

24) இலங்கையில்  பால் தரும் பசுக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு அமைக்கப்பட்ட மத்திய வலயத்தின் பெயர் யாது?

25) மீன்களின் பிரதான உணவு யாது?

26) வர்த்தக ரீதியில் இறால், நண்டுகள் அதிகளவு வளர்க்கப்படும் பிரதேசங்கள் இரண்டு தருக?

27) இலங்கையில் விவசாயத் தொழினுட்பப் பூங்கா அமைக்கப்பட்ட இடம் எது?

28) இலங்கையில் முந்திரி செய்கைக்கான ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள இடம் எது?

29) இலங்கையில் வெற்றிலைச் செய்கைக்கான ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள இடம் எது?

30) இலங்கையில் மிளகாய்ச் செய்கைக்கான ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள இடம் எது?

## பகுதி *II*

*01)* i) இலங்கையின் விவசாயத்தில் உள்ளடங்கும் துறைகள் எவை? (2 புள்ளிகள்)

ii) சுதந்திரத்தின் பின் இலங்கையில் நெல் உற்பத்தியினை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டு தருக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையின் நெற் பயிர்ச்செய்கையின் முக்கியத்துவம் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

*02)* i) இலங்கையில் நெல் ஆராய்ச்சி நிலையங்கள் நான்கினைத் தரப்பட்ட இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (2 புள்ளிகள்)



ii) இலங்கையில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வலயங்கள் மூன்றினைத் தருக.

iii) மேலே வினா (ii) இல் குறிப்பிட்ட வலயங்களில் ஒன்றின் பண்புகள் ஐந்து தருக? (5 புள்ளிகள்)

*03)* i) இலங்கையில் வரண்ட வலயத்தில் நெல் பயிரிடப்படும் மாவட்டங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய மரபணுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட நெல் இனங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையில் நெற்பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான பௌதிகக் காரணிகள் மூன்றினையும், மானிடக் காரணிகள் இரண்டினையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

*04)* i) இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் மாவட்டங்கள் நான்கினை இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (2 புள்ளிகள்)



ii) நில உயர அடிப்படையில் இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களின் மூன்று பிரிவுகளையும் தருக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கைக்குச் சாதகமான காரணிகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

05) i) இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேயிலை உற்பத்தி வகைகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையின் தேயிலையைக் கொள்வனவு செய்யும் மத்தியகிழக்கு நாடுகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

06) i) தெங்கு சார் உற்பத்திகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையின் தெங்குப் பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) தெங்குசார் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

07) i) இலங்கையில் புதிதாக இறப்பர் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள இரண்டு மாவட்டங்களையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) இறப்பர் பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதனால் ஏற்படும் பொருளாதாரப் பயன்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையில் இறப்பர் பயிர்ச்செய்கையின் பரம்பலுக்குச் சாதகமான காரணிகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

08) i) இலங்கையில் மரமுந்திரிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையில் பயிரிடப்படும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆறு தருக. (3 புள்ளிகள்)

iii) இலங்கை அரசு சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையின் விருத்தியில் விசேட கவனம் செலுத்துவதற்கான காரணங்கள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

09) i) இலங்கையின் மகாவலி அபிவிருத்தி வலயத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்களாகப் பயிரிடப்படுகின்ற பயிர்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையின் மரக்கறிச் செய்கையுடன் தொடர்புடைய விசேடமான பிரதேசங்கள் மூன்றும் எவை? (3 புள்ளிகள்)

iii) அண்மைக் காலத்தில் இலங்கையில் கால்நடை வளர்ப்புத் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கான காரணம் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

10) i) இலங்கையில் வர்த்தக ரீதியில் மரக்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையில் இருந்து பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்ற முறைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழிலின் விருத்திக்குச் சாதகமான காரணிகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

11) i) பால் சார்ந்த உற்பத்திப் பொருள்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கைக்கு உரிய கடல் எல்லைகள் மூன்றினையும் குறிப்பிட்டு, அவற்றுக்கான தூரத்தினை கடல் மைல்களில் தருக. (3 புள்ளிகள்)

iii) மீன்பிடிக் கைத்தொழிலின் முக்கியத்துவம் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

12) i) மீன்பிடி உபகரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) நன்னீர் மீன் இனங்கள் ஆறு தருக. (3 புள்ளிகள்)

iii) நிலப்பயன்பாடு தொடர்பான பிரச்சினைகள் ஐந்து தருக. (5 புள்ளிகள்)

13) i) இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட குறுகிய காலத்தில் விளைச்சலைத் தரக்கூடிய தென்னை இனங்கள் இரண்டு தருக. *(2 புள்ளிகள்)*

ii) தென்னை நிலங்களில் பயரிடப்படும் ஊடு பயிர்கள் மூன்று தருக. *(3 புள்ளிகள்)*

iii) இலங்கையின் விவசாயத்துடன் தொடர்புடைய உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள் ஐந்து தருக. *(5 புள்ளிகள்)*

14) i) இலங்கையின் விவசாயத்தினை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள வேலைத்திட்டங்கள் இரண்டு தருக. *(2 புள்ளிகள்)*

ii) இலங்கையின் பொருளாதாரத்தின் மூன்று பிரதான துறைகளும் எவை? *(3 புள்ளிகள்)*

iii) இலங்கையின் விவசாயம் சார்ந்த போக்குகள் ஐந்து தருக. *(5 புள்ளிகள்)*

15) அ) பின்வரும் இடங்களைத் தரப்பட்ட இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1) மகா இலுப்பல்லம
2) பத்தலகொட
3) போம்புவல
4) ஹிங்குறாங்கொட
5) அம்பாந்தோட்டை
6) தலவாக்கலை
7) அகலவத்தை
8) லுணுவில
9) எம்பிலிப்பிட்டிய
10) தங்காலை



*(10 புள்ளிகள்)*

ஆ) பின்வரும் இடங்களைத் தரப்பட்ட இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1) பருத்தித்துறை முனை
2) மன்னார்க்குடா
3) புத்தளம் கடனீரேரி
4) கொட்டியாரக்குடா
5) ஹிக்கடுவ
6) பேதுறுகடலடித்தளமேடை
7) நெடுந்தீவு
8) விக்டோரியா நீர்த்தேக்கம்
9) வவுனிக்குளம்
10) பராக்கிரம சமுத்திரம்

*(10 புள்ளிகள்)*



## அலகு - 05
## தயாரிப்புக் கைத்தொழில்

### பகுதி *I*

✻ சுருக்கமான விடை தருக.

☞ **இரும்புருக்குக் கைத்தொழில்**

*01) உலகில் கைத்தொழில் புரட்சி முதன் முதலில் ஏற்பட்ட நாடு எது?*

*02) உற்பத்திக் கைத்தொழிலில் மிகவும் புராதனமான கைத்தொழில் எது?*

*03) இரும்புருக்குக் கைத்தொழிலின் மூலப் பொருள் எது?*

*04) இரும்புருக்குக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்குக் காரணமான உலோகம் எது?*

*05) அண்மைக்காலத்தில் உலக இரும்புருக்கு உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு எது?*

*06) கழிவிரும்பை இறக்குமதி செய்து இரும்பு உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு எது?*

*07) 2012 இல் உலக இரும்பு ஏற்றுமதியில் சீனா பங்களிப்புச் செய்த சதவீதத்தின் அளவு யாது?*

*08) அண்மையில் உருக்கு இரும்பிற்கான கேள்வி அதிகரிக்கும் புதிய கைத்தொழில் பிராந்தியம் எது?*

☞ **மோட்டார் வாகனக் கைத்தொழில்**

*09) மோட்டார் வாகன கைத்தொழிலில் இன்று முதன்மை வகிக்கும் நாடு எது?*

*10) 2012ம் ஆண்டின் தரவின்படி இரும்பு உற்பத்தியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நாடு எது?*

*11) இன்று மோட்டார் வாகன உற்பத்தியில் பயன்படும் புதிய தொழினுட்ப முறை எது?*

*12) மோட்டார் வாகன உற்பத்தியில் புதிய நாடுகள் கையாளும் நவீன முறை எது?*

*13) மோட்டார் வாகன உற்பத்தியில் அதிகளவு உரிமையைக் கொண்டுள்ள நிறுவனம் எது?*

*14) எரிபொருள் நுகர்வை மட்டுப்படுத்துவதற்காக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வாகன வகை எது?*

*15) தென் அமெரிக்காவில், மோட்டார் வாகன உற்பத்தியில் முதன்மை வகிக்கும் நாடு எது?*

☞ **கப்பல் கட்டும் கைத்தொழில்**

*16) கப்பல் கட்டும் கைத்தொழிலில் இன்று முதன்மை வகிக்கும் நாடு எது?*

*17) ஆரம்ப காலங்களில் கப்பல் கட்டும் கைத்தொழிலின் விருத்திக்கு வித்திட்ட பிரதான காரணி எது?*

*18) இலங்கையில் கப்பல் கட்டும் கைத்தொழிலில் பின்பற்றப்படும் முறை எது?*

*19) நவீன கப்பல்களின் போக்குவரத்துப் பாதைகளைச் சரியாக வழிப்படுத்தப் பயன்படுகின்ற நவீன தொழில் நுட்பமுறை எது?*

*20) கப்பல் கட்டும் கைத்தொழிலில் இன்று இரும்புக்குப் பதிலாகப் பயன்படுத்தும் பொருள் எது?*

☞ **இலத்திரனியல் கைத்தொழில்**

*21) உலக இலத்திரனியல் உற்பத்தியில் முதன்மை வகிக்கும் நாடு எது?*

*22) உலகளாவிய ரீதியில் இலத்திரனியல் உற்பத்தியில் சீனாவின் பங்களிப்பினைச் சதவீதத்தில் தருக?*

23) இலத்திரனியல் உற்பத்தியில் அதிகளவு உற்பத்தி செய்யப்படும் உபகரண வகை எது?

24) இலத்திரனியல் கைத்தொழில் வீட்டுப் பாவனைப் பொருட்களின் உற்பத்தி சதவீதத்தின் அளவினைத் தருக.

25) உலக இலத்திரனியல் உற்பத்தியில் யப்பான் பங்களிப்புச் செய்யும் சதவீதம் யாது?

26) உலக லேசர் இறுவட்டு உற்பத்தியில் சீனா பங்களிப்புச் செய்யும் சதவீதத்தினைத் தருக.

27) இலத்திரனியல் உற்பத்திகளை இயக்கும் பிரதான சக்தி முதல் எது?

28) உலக இலத்திரனியல் உற்பத்தியில் தொடர்பாடல் சாதன உற்பத்திகள் எத்தனையாவது இடத்தைப் பெறுகின்றன?

29) சீனாவின் அரச செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் பண வகை எது?

30) உலகளாவிய ரீதியில் சீனா புகைப்பட கருவிகள் உற்பத்தியில் கொண்டுள்ள சதவீதத்தினைதத் தருக.

☞ **பருத்தி நெசவுக் கைத்தொழில்**

31) கடந்த காலங்களில் பருத்திப் புடவை உற்பத்தியில் முதன்மை வகித்த நாடு எது?

32) 21 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பருத்திப்புடவை உற்பத்தியில் முதன்மை வகிக்கும் ஆசியப் பிரதேசம் எது?

33) சீனாவின் பிரதான பருத்தி உற்பத்திப் பிரதேசம் எது?

34) நில்காஸ் பருத்திப் புடவை உற்பத்திப் பிரதேசம் அமைந்துள்ள நாடு எது?

35) உற்பத்திக் கைத்தொழிலில் இயந்திர சாதனங்களை அதிகளவு பயன்படுத்துவதனால் ஏற்படும் பிரதான பிரச்சினை என்ன?

36) உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கும் உற்பத்தி எது?

37) 2012 இல் இரும்புருக்கு இறக்குமதியில் முன்னணி வகித்த நாடு எது?

38) குஷ்நெட்ஸ், யூரல் இரும்புருக்கு வலயங்கள் அமைந்துள்ள நாடு எது?

39) அப்பலாச்சியன் நிலக்கரி வலயம் அமைந்துள்ள நாடு எது?

40) உலகில் 18 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் அதிகளவில் வளர்ச்சியடைந்திருந்த கைத்தொழில் வகை எது?

## பகுதி *II*

01) அ) உற்பத்திக் கைத் தொழில்கள் நான்கினைத் தருக. (2 புள்ளி)

ஆ) கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் ஆறு காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

ஆ) உற்பத்திக் கைத்தொழில் சார்ந்த பிரச்சினைகள் மூன்றினைக் குறிப்பிட்டு, இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

02) அ) இரும்புருக்குக் கைத்தொழிலில் ஈடுபடும் ஆசிய நாடுகள் நான்கு தருக. (2 புள்ளி)

ஆ) இரும்புருக்குக் கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) A) இரும்புருக்குக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் இரண்டினைத் தருக. (2 புள்ளி)

B) இரும்புருக்குக் கைத்தொழில் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

03) அ) இரும்புருக்குக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள் ஒன்றினையும், வலுப் பொருள் ஒன்றினையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) இரும்புருக்கு உற்பத்தியில் ஈடுபடும் சீனா, இந்தியா, யப்பான் ஆகிய நாடுகளின் உற்பத்தி மையங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) இரும்புருக்குக் கைத்தொழிலைத் தீர்மானிக்கும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு, இரண்டைச் சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளி)

04) அ) மோட்டார் வாகனக் கைத்தொழிலில் ஈடுபடும் பின்வரும் நாடுகளை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
1) சீனா 2) ஐக்கிய அமெரிக்கா 3) யப்பான் 4) தென்கொரியா

(2 புள்ளி)



ஆ) மோட்டார் வாகனக் கைத்தொழிலில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் ஆறினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) A) மோட்டார் வாகனக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டு தருக. (2 புள்ளி)

B) மோட்டார் வாகனக் கைத்தொழிலின் அண்மைக்காலப்போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

05) அ) இன்று உலகில் கட்டப்படும் கப்பல்களின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) ஐரோப்பாவில் கப்பல் கட்டும் கைத்தொழில் விருத்தி பெற்றமைக்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) அண்மையில் கிழக்காசியாவில் கப்பல் கட்டும் கைத்தொழில் விருத்தி பெற்று வருகின்றமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

06) அ) இலத்திரனியல் உற்பத்திப் பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) இலத்திரனியல் கைத்தொழிலில் ஈடுபடும் நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) இலத்திரனியல் கைத்தொழிலின் நவீன போக்குகள் ஐந்தினைப் பட்டியலிடுக. (5 புள்ளி)

07) அ) உலகின் பருத்தி நெசவு உற்பத்திப் பிரதேசங்கள் நான்கு தருக. (2 புள்ளி)

ஆ) மேலே (அ) பிரிவில் நீர் குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றினைத் தெரிவுசெய்து, அங்கு அக்கைத்தொழிலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) பருத்தி நெசவுக் கைத்தொழிலின் நவீன போக்குகள் ஐந்து தருக. (5 புள்ளி)

08) அ) உற்பத்திக் கைத்தொழிலில் எதிர்நோக்கும் சந்தை சார்ந்த பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) உற்பத்திக் கைத்தொழில் எதிர்நோக்கும் சக்தி சார்ந்த மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ) உற்பத்திக் கைத்தொழிலில் எதிர்நோக்கும் சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் மூன்றினைக் குறிப்பிட்டு, இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

## அலகு - 06
## இலங்கையின் கைத்தொழில்கள் சிலவற்றின் பரம்பல் பிரச்சினைகளும் போக்குகளும்

### பகுதி *I*

01) இலங்கையில் ஆரம்பகாலத்தில் கைத்தொழில் இடம் பெற்றமைக்கான வரலாற்று ஆதாரம் கிடைக்கப்பெற்ற இடம் ஒன்று தருக.

02) இலங்கையின் ஆரம்பகாலக் கைத்தொழில் பின்னடைவினை எதிர்கொண்டமைக்கான காரணம் என்ன?

03) இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் கைத்தொழில்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களத்தின் பெயர் என்ன?

04) இலங்கையில் 1977 இற்குப் பின்னர் நடைமுறையில் காணப்பட்ட பொருளாதாரக் கொள்கை யாது?

05) இலங்கையில் கைத்தொழில் துறையில் தனியார் நிறுவனப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு ஏதுவாய் அமைந்த காரணி யாது?

06) திறந்த பொருளாதாரக் கொள்கையினால் இலங்கையில் விரிவுபடுத்தப்பட்ட கைத்தொழில் துறை எது?

07) இலங்கையின் தயாரிப்புக் கைத்தொழிலில் அதிக பங்களிப்பினை வழங்கும் உற்பத்தி யாது?

08) உலகில் உயர்தரமான காபன் அடங்கிய காரீயம் காணப்படும் நாடு எது?

09) பென்சில்கூர் தயாரிப்பிற்குப் பயன்படும் மூலப் பொருள் எது?

10) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் காரீயத்தில் கைத்தொழில் மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்படும் சதவீதம் யாது?

11) இலங்கையின் காரீயத்தினை அதிகளவு கொள்வனவு செய்யும் நாடு எது?

12) இலங்கையின் மைக்காவை அதிகளவு கொள்வனவு செய்யும் நாடு எது?

13) இலங்கையின் உயர்தரமான பீங்கான் உற்பத்திக்குப் பயன்படும் பிரதான மூலப்பொருள் யாது?

14) இலங்கையில் தரை ஓடுகள், மட்பாண்டப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படும் பிரதான மூலப்பொருள் என்ன?

15) இலங்கையில் பீங்கான் களி பரவிக் காணப்படும் பிரதேசம் எது?

16) மட்பாண்ட வர்த்தகப் பொருள் உற்பத்தியில் அதிக ஏற்றுமதி வருமானத்தை பெற்றுத்தரும் உற்பத்திப் பொருள் என்ன?

17) வட மாகாணத்தில் பந்துக்களி பரந்து காணப்படும் பிரதேசம் எது?

18) இலங்கையின் பீங்கான் களி தொடர்பான கைத்தொழில் உள்ளடங்கும் கைத்தொழில் வகை எது?

19) உலகில் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட உயர் வருமானம் தருகின்ற கைத்தொழில் எது?

20) இலங்கையில் இலத்திரனியல் கைத்தொழில் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணி எது?

21) சுத்திகரிப்பு ஆலையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவப் பொருட்களைப் பெற்றதன் பின்னர் மிகுதியாகும் பொருட்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் எது?

22) ஆரம்பகாலத்தில் இலங்கை கனிப்பொருள் எண்ணெயின் தேவையைப் பூர்த்தி செய்த முறையினைத் தருக.

23) இலங்கையில் கனிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?

24) இலங்கையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதும், முன்னேற்றத்தினைக் கொண்டதுமான கைத்தொழில் எது?

25) இலங்கையில் சிறிய மோட்டார் வாகனக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டினைத் தருக.

26) இலங்கையில் பிரதான மைக்ரோ மோட்டார் வாகனம் பொருத்தும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

27) இலங்கையில் படகு கட்டும் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் எவை?

28) உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திக் கைத்தொழிலின் கேள்வி அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி யாது?

29) சிறிய முதலீட்டுடன், குடும்பத்தவரின் உழைப்பை இணைத்து மேற்கொள்ளும் கைத்தொழில் முறை யாது?

30) இலங்கையில் பித்தளை அலங்காரப் பொருட்கள் உற்பத்திக்குப் பிரபல்யமான இடம் எது?

31) இலங்கையில் மரத் தளபாடப் பொருள் உற்பத்திக்குப் பிரபல்யமான இடம் எது?

32) இலங்கையில் பிரம்பு சார் உற்பத்திக்குப் பிரபல்யமான இடம் எது?

33) இலங்கையில் முகமூடித் தயாரிப்புக்குப் பிரபல்யமான இடம் எது?

34) திவிநெகும தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ஊக்குவிப்பு வழங்கப்பட்ட கைத்தொழில் துறை யாது?

35) குடிசைக் கைத்தொழிலின் விருத்திக்குப் பங்களிப்பு வழங்கும் கைத்தொழில் எது?

36) இலங்கையில் சுற்றுலா வலயங்களை அங்கீகரித்த சபையின் பெயரைத் தருக.

37) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கையைத் தருக.

38) அநுராதபுரம், சிகிரியா, தம்புள்ள, பொலன்னறுவை போன்ற இடங்கள் உள்ளடக்கப்பட்ட சுற்றுலா வலயம் எது?

39) பேருவளை, பெந்தோட்ட, ஹிக்கடுவை, கதிர்காமம் போன்ற இடங்கள் உள்ளடக்கப்பட்ட சுற்றுலா வலயம் எது?

40) இலங்கையில் வேகமாக விருத்தியடைந்து வரும் கைத்தொழில் எது?

41) 2012 இல் மொத்தத் தேசிய உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பு யாது?

42) இலங்கையின் ஏற்றுமதி வகைகளுள் கைத்தொழில் துறையின் பங்களிப்பு யாது?

43) இலங்கை பெற்றுக்கொள்ளும் அந்நியச் செலாவணியில் அதிக பங்களிப்பு வழங்கும் துறை எது?

44) இலங்கையின் கைத்தொழில் துறையில் குறைந்தளவு பங்களிப்புச் செய்யும் துறை யாது?

45) இலங்கையின் ஏற்றுமதியில் விவசாயத் துறையின் பங்களிப்பினைச் சதவீதத்தில் தருக.

46) பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களில் "சுற்றுலாவும் விருந்தோம்பலும்" கற்கை நெறி நடாத்தப்படுவதன் நோக்கம் யாது?

47) இலங்கையின் சனத்தொகை அடர்த்தியான பிரதேசங்களில் நடைபெறும் கைத்தொழில் வகையைத் தருக?

48) இலங்கையில் ஆரம்பகாலத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்துறை யாது?

49) இலங்கையின் கைத்தொழில் வரலாற்று ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் ஒன்று.

50) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற கைத்தொழில் உற்பத்திகள் இரண்டு தருக.

## பகுதி *II*

*01)* i) இலங்கையில் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட கைத்தொழில்கள் இரண்டு தருக. *(2 புள்ளி)*

ii) தற்போது இலங்கையின் கைத்தொழில் துறையில் முன்னணி வகிக்கும் உற்பத்திகள் மூன்று தருக. *(3 புள்ளி)*

iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பினை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக. *(5 புள்ளி)*

*02)* i) இலங்கைப் பொருளாதாரத்தில் பங்களிப்புச் செய்யும் பொருளாதாரத் துறைகள் எவை? *(2 புள்ளி)*

ii) இலங்கைப் பொருளாதாரத்தில் கைத்தொழில் துறை பங்களிப்புச் செய்யும் மூன்று கூறுகளும் எவை? *(3 புள்ளி)*

iii) இலங்கையில் கைத்தொழில் துறைச் செயற்பாடு சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, விளக்குக. *(5 புள்ளி)*

*03)* i) இலங்கையில் காரீயம் பரம்பியுள்ள பிரதேசங்கள் நான்கு தருக. *(2 புள்ளி)*

ii) இலங்கையில் மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள் மூன்று தருக. *(3 புள்ளி)*

iii) காரீயக் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. *(5 புள்ளி)*

*04)* i) இலங்கையின் காரீயத்தினைக் கொள்வனவு செய்யும் நாடுகள் நான்கு தருக. *(2 புள்ளி)*

ii) காரீயக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்று தருக. *(3 புள்ளி)*

iii) காரீயக் கைத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. *(5 புள்ளி)*

*05)* i) இலங்கையில் காணப்படும் காரீயத்தின் வகைகள் இரண்டு தருக? *(2 புள்ளி)*

ii) இலங்கைப் புறவுருவப் படத்தில் மைக்கா பரம்பியுள்ள பிரதேசங்கள் இரண்டினையும், காரீயம் பரம்பியுள்ள பிரதேசங்கள் இரண்டினையும் குறித்துப் பெயரிடுக. *(4 புள்ளி)*



iii) மைக்கா பயன்படுத்திச் செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் நான்கு தருக. *(4 புள்ளி)*

06) i) பீங்கான் களிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படும் இடங்கள் நான்கு தருக. (2 புள்ளி)

ii) பீங்கான் களி தொடர்பான கைத்தொழிலின் அண்மைக் காலப்போக்குகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) பீங்கான் களி தொடர்பான கைத்தொழிலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

07) i) இலங்கையில் இலத்திரனியல் கைத்தொழில் நடைபெறும் பிரதேசங்கள் இரண்டு தருக. (2 புள்ளி)

ii) இலத்திரனியல் கைத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மூன்று தருக. (3 புள்ளி)

ii) இலத்திரனியல் கைத்தொழிலின் அண்மைக் காலப்போக்குகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

08) i) இலங்கையில் பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் நடைபெறும் வலயங்கள் இரண்டு தருக. (2 புள்ளி)

ii) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலுடன் தொடர்பான உற்பத்திகள் ஆறு தருக. (3 புள்ளி)

iii) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

09) i) இலங்கையில் கனிய எண்ணெய் சுத்திகரிப்பு இடம்பெறும் இடங்கள் நான்கினை இலங்கை மாவட்ட புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (2 புள்ளி)



ii) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்றினைத் தருக. (3 புள்ளி)

iii) பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலை விருத்தி செய்வதினால் ஏற்படும் அனுகூலம் ஒன்றினையும், பிரதிகூலம் ஒன்றினையும் விளக்குக. (5 புள்ளி)

10) i) இலங்கையில் மோட்டார் வாகனக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக? (2 புள்ளி)

ii) மோட்டார் வாகனக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) மோட்டார் வாகனக் கைத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

11) i) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் படகுகளைக் கொள்வனவு செய்யும் நாடுகள் நான்கு தருக? (2 புள்ளி)

ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் படகுகளின் வகைகள் ஆறு தருக. (3 புள்ளி)

iii) படகு கட்டும் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

12) i) இலங்கையில் படகு கட்டும் பிரதேசங்கள் நான்கினைத் தரப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக. (2 புள்ளி)



The National e-learning Portal for The General Education

ii) படகு கட்டும் கைத்தொழிலில் இலங்கை ஈடுபடுவதைத் தீர்மானித்த காரணிகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) படகு கட்டும் கைத்தொழிலின் அண்மைக்காலப்போக்குகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

13) i) உணவு மற்றும் பான வகை உற்பத்திப் பொருட்கள் நான்கு தருக. (2 புள்ளி)

ii) உணவு மற்றும் பான வகை உற்பத்திக் கைத்தொழிலின் போக்குகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) உணவு மற்றும் பான வகை உற்பத்திக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

14) i) குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டு தருக. (2 புள்ளி)

ii) குடிசைக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) குடிசைக் கைத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

15) i) இலங்கையின் சுற்றுலா வலயங்களைத் தரப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

(2 புள்ளி)



ii) சுற்றுலாக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்று தருக. (3 புள்ளி)

iii) சுற்றுலாக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

## அலகு - 07
## படங்களுக்கு ஓர் அறிமுகம்

**✻ 1 - 40 வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

01) உலகின் மிகப் பழைய தேசப்படம் எது?

02) “GIS” எனும் சொற்பதத்தின் விரிவாக்கத்தைத் தருக?

03) ஒரு குறித்த விடயம் பற்றிய தகவல்களை மாத்திரம் முன்வைப்பதற்கு பயன்படுத்தப்படும் படத்தினைப் பெயரிடுக.

04) 1 : 50,000 அளவுத்திட்ட இடவிளக்கப்படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளியைத் தருக.

05) 1 : 50,000 அளவுத்திட்டத்தில் நிலத்தில் 1 km நீளமான தூரம் படத்தில் காட்டப்படும் அளவு யாது?


06) பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனை வரையுமான நீளத்தினை km இல் தருக.

07) இலங்கையில் கொழும்பிலிருந்து சங்கமன்கந்த முனை வரைக்குமான ஆகக்கூடிய அகலத்தினைக் km இல் தருக.

08) மெற்றிக் அளவுத்திட்டத்தில் இலங்கை முழுவதற்கும் வரையப்பட்ட படத்தாள்களின் எண்ணிக்கையைத் தருக.

09) 1 : 50,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட ஒரு படத்தாளின் நீளம், அகலம் என்பவற்றை முறையே தருக.

10) 1 : 50,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட படத்தாள் ஒன்றின் பிரதேசப் பரப்பு யாது?




**✻ மேலே 1 : 50000 இடவிளக்கப்படத்தின் உள்ளடக்கம் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தை அடிப்படையாகக் கொண்டு 11 - 18 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

11) புற எல்லைத் தகவல்களுள் வெளி எல்லையின் மேல் ஓரத்தினுள் A யினால் குறித்துக் காட்டப்படும் விடயம் எது?

12) புற எல்லைத் தகவல்களுள் வெளி எல்லையின் மேல் ஓரத்தினுள் B யினால் குறித்துக் காட்டப்படும் விடயம் எது?

13) புற எல்லைத் தகவல்களுள் வெளி எல்லையின் மேல் ஓரத்தினுள் C யினால் குறித்துக் காட்டப்படும் விடயம் எது?

14) இடவிளக்கப்படங்களில் அகலக்கோடுகள் மற்றும் நெடுங்கோடுகளின் பெறுமானங்கள் குறித்துக் காட்டப்படும் பகுதி எது?

15) இடவிளக்கப்படங்களில் அளவுத்திட்டம், திசை, குறியீட்டு விளக்கம் போன்றன குறித்துக் காட்டப்படும் பகுதி எது?

16) இடவிளக்கப்படங்களில் பௌதிக, பண்பாட்டு அம்சங்கள் குறித்துக் காட்டப்படும் பகுதி எது?

17) 1 : 50,000 இடவிளக்கப்படங்களின் திருத்த எல்லைக் கோட்டின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைக் கோடுகளில் குறிக்கப்படும் பெறுமானம் குறித்து நிற்கும் விடயம் யாது?

18) திருத்த  எல்லைக் கோட்டின் வடக்கு மற்றும் தெற்கு எல்லைக் கோடுகளில் குறிக்கப்படும் பெறுமானம் எதைக் குறித்து நிற்கின்றது?

19) 1 : 50,000 இடவிளக்கப்படங்களில் அகலக்கோடுகள் மற்றும் நெடுங்கோடுகளின் பெறுமானங்கள் குறிப்பிடப்பட்டுள்ள நாழிகை இடைவெளியைத் தருக?

20) இலங்கையின் 1 :50,000 இடவிளக்கப் படம் வரைவதற்குப் பயன்படுத்தப்படும் எறியம் எது?

21) இலங்கையின் மத்தியில் அமைந்துள்ள மிக உயர்ந்த புள்ளியாகத் தெரிவுசெய்யப்பட்ட மலையுச்சி எது?

22) பூகோளத்தில் வடக்கு முனைவு அமைவு பெற்றிருப்பதை காட்டும் திசை எது?

23) புவியின் காந்தப் புலத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் வடக்கு எது?


24) அளவுத்திட்ட வகைகளுள் கிடையான கோட்டில் அமைக்கப்படும் அளவுத்திட்டத்திற்கு வழங்கப்படும் பெயர் என்ன?

25) அளவுத்திட்ட வகைகளுள் விகிதமாகக் குறிப்பிடப்படும் அளவுத்திட்டத்திற்கு வழங்கப்படும் பெயர் என்ன?

26) 1 : 50,000 அளவுத்திட்டத்தில் படத்தில் 10 cm நீளமான வீதியொன்றின் உண்மைத் தூரம் யாது?

27) 1 : 50,000 அளவுத்திட்டத்திற்கேற்ப 4 km நீளமான நீர்ப்பாசனக் கால்வாய் படத்தில் காட்டப்படும் தூரம் யாது?

28) 1 : 50,000 அளவுத்திட்டத்திற்கேற்ப 2 km நீளமான A தர வீதி படத்தில் காட்டப்படும் தூரம் யாது?

29) 


1 : 50,000 அளவுத்திட்டத்தின் படி படத்தில் காட்டப்பட்டுள்ள சதுரப் பகுதியின் பரப்பளவு என்ன?

30) 1 : 50,000 அளவுத்திட்டப் படத்தில் $4cm^2$ அளவானது நிலத்தில் குறிக்கும் தூரத்தினைக் km இல் தருக.

31) 1 : 50,000 அளவுத்திட்டத்தின் படி நிலப்பகுதியில் சதுர வடிவமான நெல் வயலின் ஒரு பக்கத்தின் நீளம் 2 km ஆகும். நெல் வயலின் பரப்பு யாது?

32) இட விளக்கப்படங்களில் ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் போன்ற நீருடன் தொடர்புடைய அம்சங்களைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் எது?

33) இடவிளக்கப்படங்களில் வீட்டுத்தோட்டங்களைக் குறிக்கப் பயன்படும் நிறம் எது?

34) இடவிளக்கப்படங்களில் சிறு வீதியைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் என்ன?

35) இடவிளக்கப்படங்களில் நெற் செய்கையைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் என்ன?

36) இடவிளக்கப்படங்களில் பிரதான வீதிகள், நிர்வாக எல்லைகள், புகையிரத நிலையங்கள் போன்றவற்றைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் எது?

37) இடவிளக்கப்படங்களில் குடியிருப்புக்கள், வெளியரும்பிய பாறை போன்றவற்றைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் எது?

38) இடவிளக்கப்படங்களில் குளங்களின் அணை, சமவுயரக் கோடுகள் போன்றவற்றைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் எது?

39) இடவிளக்கப்படங்களில் அச்சிடப்பட்ட வருடம், படம் புதுப்பிக்கப்பட்ட வருடங்கள் குறித்துக்காட்டப்படும் இடம் எது?

40) தேசப்படங்களில் " * " (கறுப்பு) எனும் குறியீடு குறித்து நிற்கும் பண்பாட்டு அம்சம் என்ன?